

புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி, மாலையீடு கற்பக விநாயகா மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் கலந்துகொண்டு, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன், மேயர் திருமதி.திலகவதி செந்தில், மரு.வை.முத்துராஜா எம்.எல்.ஏ., புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், அ.கோ.ராஜராஜன் , எம்.லியாகத் அலி, முருகேசன், செல்வி.பா.ஐஸ்வர்யா (புதுக்கோட்டை), ச.சிவக்குமார் (அறந்தாங்கி), க.ஸ்ரீதர் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### விருதுநகர் மாவட்டம் – சிவகாசி வட்டம் – காரிசேரியில் மின்சாரம் தாக்கி

# உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஏப். 16 -

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், காரிசேரி கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்ப த்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவி வழங்கியும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், காரிசேரி கிராமம், வடக்குத் தெருவில் அமைந்துள்ள மாரியம்மன் கோவில் பொங்கல் மறுபூஜைக்காக 14.4.2025 அன்று மாலை சுமார் 3.10 மணியளவில் ரேடியோ அமைக்கும் பணியின்போது அருகில் உள்ள டிரான்ஸ்பார்மர் வயரின் மீது மின்சார வயர் பட்டதில் ரேடியோ அமைக்கும் பணியை மேற்கொண்ட காரிசேரி கிராமத்தைச் சேர்ந்த திரு.திருப்பதி (வயது 27) த/பெ. ராமர் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மேலும், மேற்படி சம்பவம் இறந்த திரு.திருப்பதி அவர்களின் வீட்டிற்கு அருகில் நிகழ்ந்ததால் அவருடைய மனைவி திருமதி.லலிதா (வயது 25) மற்றும் பாட்டி திருமதி.பாக்கியம் (வயது 75) ஆகியோர் திரு.திருப்பதி என்பவரை காப்பாற்ற முயன்றபோது மேற்படி இருவர் மீதும் மின்சாரம் பாய்ந்ததில் அவர்களும் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழுந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தின ருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### 50 ஆண்டுகளுக்குப் பிறகும் உணர்வு குன்றாமல் இருக்கிற கட்சி தி.மு.க.! தலைவர் கலைஞரின் உணர்வுகளை உள்வாங்கி

# முதல்வர் வெளியிட்ட 'மாநில சுயாட்சி' அறிவிப்பில் நிச்சயம் வெற்றி பெறுவார்!

## சட்டப்பேரவையில் முதல்வர் முன்மொழிந்த அறிவிப்பை வரவேற்று – அவை முன்னவர் துரைமுருகன் உரை!

**சென்னை, ஏப். 17 -**

**சட்டப்பேரவையில், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட மாநில சுயாட்சி குறித்த அறிவிப்பினை கழகத்தின் சார்பில் வரவேற்று உரையாற்றிய அவை முன்னவர் துரைமுருகன் அவர்கள், "முதல்வர் தளபதி அவர்கள் வெளியிட்டுள்ள 'மாநில சுயாட்சி' அறிவிப்பில் நிச்சயம் வெற்றி பெறுவார்'' என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:

வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்மானத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அதன்மீது பேசுவதில் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பெருமைப்படுகிறேன். இந்தத் தீர்மா னத்திற்கு ஓர் அச்சாணியாக அமைந்திருப்பது, சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னால் 1974 ஆம் ஆண்டிலேயே மறைந்த எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த ஒரு தீர்மானம் ஆகும். அந்தத் தீர்மானத்தை 50 ஆண்டுகளுக்கு முன்னால் தலைவர் கொண்டுவந்தபொழுது, அந்தத் தீர்மானத்திலும் பேசுகிற வாய்ப்பு எனக்கு கிடைத்தது. 50 ஆண்டுகளுக்கு பிறகு இப்பொழுது தலைவர் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மா னத்திலும் பேசுகிற வாய்ப்பு கிடைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன், பெருமை கொள்கிறேன்.

இந்த நீண்ட நெடிய காலம் நாம் அரசியலில் இருப்பதற்கு காரணம் மறைந்த எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களும், இன்றைய முதல்வராக இருக்கிற தளபதியார் அவர்களும்தான் என்னுடைய நீண்ட காலத்திற்கு வழி வகுத்தவர்கள். நாளைக்கு ஒரு நாள் தளபதிக்கு அடுத்து உதயநிதி அவர்கள் வருகிறார்கள் என்று வைத்துக்கொண்டால், அப்போது தீர்மானம் வந்தாலும் நான் பேசுவேன்.

முதலில் இந்தத் தீர்மானத்திற்கு அச்சாணியாக இருந்தது தலைவருடைய தீர்மானம் என்று சொன்னேன். அந்தத் தீர்மானத்தின் ஒரு பகுதியை மட்டும் நான் படித்துக் காட்டுகிறேன். "பல்வேறு மொழி, நாகரீகம், பண்பாடு ஆகியவைகளைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக் காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும்,

மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று—மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது" என்ற தீர்மானம். அப்பொழுதே இதை உடனடியாக திருத்தம் செய்ய வேண்டும் என்றார்கள். 50 ஆண்டுகள் ஆகியும் அரசியல் சட்டம் திருத்தப்படவில்லை; மாநிலங்களுக்கு சுயாட்சி கிடைக்கப்படவில்லை. ஆனால், இந்த 50 ஆண்டுகளில் எத்தனையோ மாறுதல்கள் நடைபெற்று விட்டன. 50 ஆண்டுகளுக்கு முன்னால் நிலைமை வேறு.

அப்போது அரசியல் கட்சிகளில், அரசியல் சித்தாந்தங்களில், மத்தியில் இருக்கிற ஆட்சிப் போக்கு, மாநிலங்களுடைய ஆட்சி போக்கு, கட்சிகளினுடைய ஆட்சி போக்கு இவையெல்லாம் மனிதர்களுடைய மன ஓட்டம்கூட மாறி இருக்கிறது. இப்பொழுது நாம் தீர்மானம் போட்டு மத்திய சர்க்காரைக் கேட்கிறோம். ஞாபகம் இருக்கும் என்று கருதுகிறேன்.



**மகத்தான வாக்குறுதி!**

வங்காளத்திலிருந்து அசாமை பிரித்தார்கள். அப்போது நேரு அவர்கள் இருந்த காலம். எண்ணெய் கிணறுகள் அசாமுக்குப் போகும் என்று நேரு அவர்கள் சொன்னார்கள். B.C. Roy அவர்கள் அப்போதைய கொல்கத்தாவினுடைய முதலமைச்சர். நேருவையே 'My dear boy' என்றுதான் அழைப்பார். அவ்வளவு பெரியவர். அவர் சொன்னார், இங்கே இருக்கிற கிணறுகளைப் பிரித்து, பிரித்து அசாமிற்குக் கொடுப்பார்களேயானால் ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கின்ற கவர்னர் மாளிகைகள் தூதுவரகங்களாக மாறும் என்று சொன்னார். அப்படிப்பட்ட வார்த்தைகளை போட்டு அல்ல நாம் கேட்பது. தீர்மானங்கள் போட்டுத்தான் நாம் கேட்கிறோம். அந்தத் தீர்மானங்களை இதுவரையில் அவர்கள் நிறைவேற்றவில்லை. அதேநேரத்தில் அப்போதிருந்த ஆட்சி இப்போது இருப்பதைவிட கொஞ்சம் பரவாயில்லை. இரண்டே இரண்டு போர்தான் இருந்தார்கள், சம்பத்தும், தர்மலிங்கமும். ஆனால், இந்தியை எதிர்த்து பேசுகிறபோது அந்த இரண்டு பேர் பேசுகிற கருத்தைக் கேட்டு, பண்டிதர் நேரு அவர்கள் அழைத்து "ஏன் இப்படி பேசுகிறீர்கள்?" என்று கேட்டு, அவர்கள் தனியாக விளக்கம் சொன்னபொழுது, அப்பொழுதுதான் சொன்னார் நேரு அவர்கள், இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையிலே ஆங்கிலம் நீடிக்கும்" என்ற ஒரு மகத்தான வாக்குறுதியைக் கொடுத்தார்.

**சேலம் இரும்பாலை**

அதேமாதிரி திருமதி இந்திராகாந்தி அவர்கள் NDC meeting (National Development Council)ல் உட்கார்ந்து தலைவர் அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது சேலம் இரும்பாலை அந்த agendaவில் இருக்கும் என்று பார்த்தார்கள். agendaவில் இல்லை. காலையிலே மட்டும் அந்த sessionஐ attend செய்துவிட்டு மாலையிலே கலைஞர் அவர்கள் தமிழ்நாடு இல்லத்தில் வந்து தங்கிவிட்டார்கள். மாலை sessionக்கு வந்திருந்த இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் 'Where is Karunanidhi' என்று கேட்டபொழுது, அவர் கோபமாக சேலம் இரும்பாலை இல்லை என்று போய்விட்டார் என்று சொன்னபொழுது, அந்த அம்மையாரே phone எடுத்து 'Mr. Karunanidhi, please come, I will do' என்று அங்கேயே சேலம் இரும்பாலையை கொடுத்த ஒரு காலம் இருக்கிறது. இப்படி பல திட்டங்களில், சிலநேரங்களில் மாறுகிறது. அத்தகைய கொஞ்சம் ஜனநாயகத்தை உணர்ந்த அவர்களே மாநில சுயாட்சி கொடுக்கவில்லை. ஜனநாயகத்தை பற்றி கவலைப்படாமல் பரமபதத்தை மட்டும் வைத்துக்கொண்டிருக்கிற ஒருசில பேர் இன்றைக்கு மத்தியிலே அமர்ந்து கொண்டிருக்கிறபொழுது இவர்களிடத்திலே அவர்கள் மாநிலங்களுக்கு கொடுப்பார்களா என்பது சந்தேகம்.

எவ்வளவு எதிர்த்தாலும் மத்தியில் இருக்கிற Congress Government மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய உரிமையில் அதிகமாக தலையிடவில்லை. இன்றைக்கு concurrent listல் இருக்கிற இதே கல்வியை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். இப்படி ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு போகிறார்கள். ஆனால், இவர்கள் இவ்வளவு செய்தபிறகும், மத்தியிலே இருப்பவர்களுக்கும், மாநில அரசுகளுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. ஆகையினால் மறுபடியும் அந்த திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்றுதான் நம்முடைய தலைவர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒன்றிய அரசை எதிர்த்தாலும் மாநிலங்களுக்கு தர வேண்டிய நிதிகளை தந்தாக வேண்டுமென்பதில் முன்னாள் இருந்த ஆட்சிகளுக்கு இருந்தது. ஆனால், இப்பொழுது எங்களுடைய மும்மொழிக் கொள்கையை, மத்திய அரசினுடைய கல்விக் கொள்கையை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா, இல்லையா? என்று எஜமானர்கள் பாணியில் கேட்டு, நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னால் உங்களுக்கு நாங்கள் பணம் தர மாட்டோம் என்று சொல்கிற ஒரு ஏகாதிபத்திய உணர்வு இன்றைக்கு தலைதூக்கி இருக்கிறது. ஆகவே, இது லேசானதல்ல. ஆனால், இவற்றை எதிர்ப்பதற்கு யாராவது ஒருவர் தோன்ற வேண்டும். எந்தப் பிரச்சினைகளை பார்த்தாலும் யாரோ ஒருவர் தொட்டதற்கு பிறகுதான் அது பற்றிக்கொண்டு மற்றவர்களுக்குப் போய்ச் சேரும். தீ பரவுவதுபோல் ஒரு இடத்தில் பற்றும், அது பற்றிக்கொள்ளும். அப்படி சில தலைவர்கள் சில பிரச்சினைகளை முன்வைப்பார்கள். அது கொஞ்சம் கொஞ்சமாக போகும். நினைத்துப் பாருங்கள் 50 ஆண்டுகளுக்கு முன்னால் கலைஞர் இந்தத் தீர்மானத்தை இதை கருத்திலே வைத்தார்.

**உணர்வு குன்றாத கட்சி!**

50 ஆண்டுகளுக்கு பிறகும்கூட இந்த தீர்மானத்தை சிலபேர் ஏற்றுக்கொள்ளாமல் ஓடுகிறார்கள். சிலர் எதிர்த்துப் பேசுகிறார்கள். இருந்தாலும், அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில், கலைஞருடைய பாணியில் ஆட்சி நடத்துகிற நம்முடைய தளபதி, முதலமைச்சர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கொள்கையான இதை, அண்ணா அவர்களே ஆரம்பித்தபோது, "இதடா தம்பி, நான் முதலமைச்சராக ஆசைப்படவில்லை, அதிகாரக் குவியல் எல்லாம் எங்கேயோ குவிந்துகொண்டு, வெறும் காகிதங்களில் இயற்றப்படுகிற சட்டங்களை வைத்துக்கொண்டு, நான் முதலமைச்சராக விரும்பவில்லை என்று அப்போதே ஒரு திட்டத்தைத் துவக்கி, அதற்காக மத்திய சர்க்காரோடு நான், என்னுடைய நண்பர் இ.எம்.எஸ் ஐப்போல் நான் முரண் பிடிக்க மாட்டேன் என்ற கருத்தை எழுதினார்கள்.

ஆகையினால், தளபதி அவர்கள், அந்தக் கருத்தையும், தன்னுடைய தந்தையாருடைய கருத்தையும் உள்வாங்கி, நம் மாநிலத்தின் நிலைமையையும் உள்வாங்கி, இப்போது விதி 110ன்கீழ் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், 50 ஆண்டுகளுக்குப் பிறகு, உணர்வு குன்றாமல் இருக்கிற கட்சி, திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைக் காட்டுகிறவகையில், நம்முடைய தலைவர், முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு நான் தற்போது அவரை வாழ்த்துகிறேன்.

50 ஆண்டுகளுக்கு முன்னால் இது குறித்துப் பேசிய நான், உரியவன் என்கிற முறையில் அவரை வாழ்த்துகிறேன், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மகத்தான அரசியலைக் காப்பதில் நீங்கள் வெற்றிபெறுவீர்கள். அந்த வெற்றியைப் பெற்ற பிறகு, இந்தியத் திருநாட்டிற்கு நீங்களே முதல்வராக இருக்கக்கூடிய காலம் ஒன்று வந்தே தீரும், தீரும் என்று வாழ்த்தி, விடைபெறுகிறேன்

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசினார்.

### பாலவாக்கம் க.சோமு மனைவி

# திருமதி வசந்தி சோமு மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப்.17 -

பாலவாக்கம் க.சோமுவின் துணைவியாரும், மாமன்ற உறுப்பினருமான மரு. ப.தமிழரசின் தாயாருமான திருமதி. வசந்தி சோமு மறைவுக்கு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டக் கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பாலவாக்கம் க. சோமு அவர்களின் மனைவியும், பெருநகரச் சென்னை மாநகராட்சியின் 183ஆவது வட்ட மாமன்ற உறுப்பினர் மரு. ப. தமிழரசி சோமு அவர்களின் தாயாருமான திருமதி. வசந்தி சோமு அவர்கள் மறைந்த செய்திகேட்டு மிகுந்த வருத்தமடைந்தேன்.

அவருக்கு உடல்நலம் குன்றியிருந்த செய்தி அறிந்ததுமே தொலைபேசியில் சோமு அவர்களை அழைத்து, அவரது மனைவியின் உடல்நிலை குறித்து விசாரித்தேன். புற்றுநோய்ப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக நம்பிக்கையோடு பேசினார். மீண்டு வருவார் என்று எதிர்பார்த்த நிலையில் திருமதி தமிழரசி சோமு அவர்கள் இயற்கை எய்திய செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

வாழ்க்கைத்துணையை இழந்து தவிக்கும் கழகப் பற்றாளர் சோமு அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



முரசொலி நாளிதழ் கோவை செய்தியாளர் பிலால் நேற்று முன்தினம் 15–4–2025, உடல்நலக் குறைவால் மறைவெய்தினார். கரும்புக்கடை வள்ளல் நகரில் உள்ள அவரது இல்லத்திற்கு, கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் நேரில் சென்று அவரது உடலுக்கு மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொண்டார். மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பொதுக்குழு உறுப்பினர் மு.மா.ச.முருகன், பெரிய கடைவீதி பகுதி 1 செயலாளர் மார்க்கெட் எம் மனோகரன், பெரியகடை வீதி பகுதி 2 திமுக செயலாளர் வி.ஐ.பதுருதீன், மாநகராட்சி கிழக்கு மண்டலத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், மாநகர் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் சிவராமன், மாநகர் மாவட்ட சிறுபான்மையினர் நலக் குழு அமைப்பாளர் இலா.தேவசீலன், பொறியாளர் அணி அமைப்பாளர் நா.பாபு, பொறியாளர் அணி தலைவர் கண்ணதாசன், கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் கோவை அபு,தொண்டர் அணி அமைப்பாளர் கராத்தே அர்ஜுனன், வார்டு செயலாளர் ஏ.அப்பாஸ்,பழக்கடை முத்து முருகன், சாரமேடு இஸ்மாயில், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டு மக்களுடைய உரிமைகள் – மாநில சுயாட்சியில் என்றைக்குமே அக்கறையற்றவர்கள் அ.தி.மு.க.வினர்!

# பொய்யான காரணங்களைச் சொல்லி - புதிய எஜமானர்கள் கட்டளைப்படி பேரவையிலிருந்து வெளிநடப்பு!

## தலைமைச் செயலகத்தில் – அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

**சென்னை, ஏப்.17 -**

**சட்டப்பேரவையிலிருந்து அ.தி.மு.க.வினர் வெளிநடப்புச் செய்ததையடுத்து, தலைமைச் செயலக வளாகத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி "பொய்யான காரணங்களைச் சொல்லி - புதிய எஜமானர்கள் கட்டளைப்படி பேரவையிலிருந்து அ.தி.மு.க.வினர் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டார்.**

சட்டத்துறை அமைச்சர் ரகுபதி நேற்று முன்தினம் (15.04.2025) சட்டப் பேரவைக்கு வெளியே செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

மாநில அரசுகளின் உரிமைகளை எல்லாம் மீட்டெடு க்கின்ற வண்ணம் ஒன்றிய மாநில அரசினுடைய உரிமைகளை எந்தெந்த உரிமைகளை மாநில அரசு இன்றைக்குப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை எல்லாம் ஏற்கனவே பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு ஆராய்ந்து இருந்தாலும், இன்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் ஒரு புதிய கமிட்டியை நிர்ணயித்தி ருக்கிறார்கள்.

ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஜோசப் மரியாதைக்குரிய திரு.அசோக் வர்தன் செட்டி, மரியாதைக்குரிய திரு.நாகநாதன் ஆகியோர் கொண்ட குழு, நம்முடைய ஒன்றிய அரசு, மாநில அரசுக்கான உரிமைகளைப் பற்றியும் நாம் எந்தெந்த விதங்க ளில் எல்லாம் பாதிக்கப்பட்டு இருக்கிறோமோ, அந்த பாதிப்புகளை எடுத்துக் கூறுகின்ற வண்ணம் இந்தக் கமிட்டி பரிசீலிக்கும்.

ஏற்கனவே, ராஜமன்னார் கமிட்டி பல்வேறு பரிந்துரைகளைத் தந்திருக்கிறது. அதனடிப்படையில். தமிழ்நாடு அரசு பல்வேறு கோரிக்கைகளைச் சொல்லி இருந்தாலும் கூட ஒன்றிய அரசு அதற்காக பூஜ் கமிட்டி, சர்க்காரியா கமிஷன் போன்றவற்றையெல்லாம் அமைத்திருந்தார்கள். ஆனால், இந்தக் கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கிறதே தவிர, நம்முடைய மாநில உரிமைகள் மீட்டெடுக்கப்படவில்லை. இன்றைக்கு கல்வியிலே நம்முடைய உரிமைகள் concurrence list-ல் இருக்கின்ற காரணத்தால், நம்மை அவர்கள் கலந்தாலோசித்துச் செய்ய வேண்டிய, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் கூட இன்றைக்கு அவர்கள் எடுக்கவில்லை. கல்விக்குரிய தொகையை நாம் மும்மொழித் திட்டத்தை அறிமுகப்படுத்த முடியாது என்று சொன்னதால், நமக்கு தரவேண்டிய தொகையை இன்றைக்கு ஒன்றிய அரசு தர மறுக்கின்றது. 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தில், ஒரு 3, 4 மாதங்களுக்கான அந்தத் தொகை 100 நாள் வேலை வாய்ப்பு பணியாளர்களுக்கு தரப்படாமல் இருக்கிறது.



அதேபோல, நாம் கொடுக்கின்ற அந்த ஒன்றிய அரசுக்கான அந்த ஜி.எஸ்.டி. நிதிப் பகிர்வு என்பது 29 பைசாவாகவே இருக்கிறது. இன்றைக்கு பீஹாருக்கோ, உத்தரப்பிரதேசத்திற்கோ நீங்கள் 1 ரூபாய் வரிக்கு எந்த அளவுக்கு அதிகமாக கொடுக்கிறீர்களோ, எங்களுக்கு அந்த அளவுக்கு வேண்டாம் - நாங்கள் ஒரு ரூபாய் கொடுக்கின்ற பொழுது, எங்களுக்கு 50 பைசாவையாவது திருப்பித் தாருங்கள் என்பது தான் நம்முடைய கோரிக்கை.

அதேபோல இன்றைக்கு சட்டமன்றத்தில், பாரதிய ஜனதா கட்சியின் தலைவராக பொறுப்பேற்று இருக்கக்கூடிய நயினார் நாகேந்திரன் அவர்கள் 29 பைசா தருவதையே பெருமையாகச் சொன்னார். ஆனால், அவர் பீகாருக்கும், உத்திரப் பிரதேசத்திற்கும் என்ன கொடுக்கிறோம் என்பதை அவர் சொல்ல தவறிவிட்டார். எனவே, எந்தெந்த வகையில் நாம் வஞ்சிக்கப்பட்டி ருக்குமோ அதிலிருந்து மீட்டெடுப்பதற்காகவும், நம்முடைய உரிமைகள் எல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், முதலமைச்சர் அவர்கள் இந்த கமிட்டியை இன்றைக்கு நியமித்திருக்கி றார்கள். அதனுடைய பரிந்துரைகளின் அடிப்படையில் நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, நம்முடைய மாநில உரிமைகளை மீட்டெடுக்க கடமைப்பட்டி ருக்கின்றோம்.

பிரதான எதிர்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் வழக்கம்போல வெளிநடப்புச் செய்துவிட்டார்கள். தமிழ்நாடு மக்களுடைய உரிமைகளில், மாநில சுயாட்சியில், மாநிலத்திற்கான அதிகாரங்கள் நாம் பெறுவதில் அவர்களுக்கு என்றைக்குமே அக்கறையில்லை. புதிய எஜமானர்களின் கட்டளைப்படி இன்றைக்கு அவர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். அதற்கான பொய்யான காரணங்களை அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். எல்லோருக்கும் அந்த 110 விதி முடிந்த பிறகு பேச வாய்ப்பு தருகிறேன் என்று சட்டப் பேரவைத் தலைவர் சொன்ன பிறகும்கூட - எங்கள் கோரிக்கையை நீங்கள் முதலில் கேட்க வேண்டும் அப்போதுதான் முதலமைச்சர் 110 விதியின் கீழ் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று சொல்லி சத்தம் போட்டு விட்டு, வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். ஏனென்றால், அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது - இன்றைக்கு மாநில சுயாட்சி மாநிலத்தில் உரிமைகளைக் காப்பதற்காக தீர்மானம் கொண்டு வரப் போகிறோம் என்பது. எனவேதான், தெரிந்தே இன்றைக்கு அவர்கள் வெளிநடப்புச் செய்து இருக்கிறார்கள்.

### கோவை மாவட்ட

# முரசொலி செய்தியாளர் பிலால் மறைவு!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் – கழகத்தினர் அஞ்சலி!

*கோவை , ஏப். 17 -*

*கோவை மாவட்ட முரசொலி செய்தியாளராக பணிபுரிந்து வந்த பிலால் அவர்கள் (வயது 43) உடல் நலக் குறைவு காரணமாக நேற்று முன் தினம் (15.04.2025-செவ்வாய்க் கிழமை) பிற்பகல் இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்து கிறோம்.*

*இச்செய்தி அறிந்ததும் கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் நா.கார்த்திக் உள்ளிட்ட கழகத்தினர் நேரில் சென்று மறைந்த பிலால் அவர்களின் உடல் மீது மலர் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.*



*மறைந்த பிலால் அவர்களுக்கு மனைவி, மகன் , மகள் உள்ளனர்.*

*நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் அன்னாரது இறுதி அடக்கம் நடை பெற்றது.*